அரியலூர் மாவட்டத்தில் ரூபாய் 101.50 கோடி மதிப்பீட்டில் ஒருங்கிணைந்த நீதிமன்ற வளாகம் அமைக்கப்படும் என்று முதலமைச்சர் தளபதி மு.க.ஸ்டாலின் அவர்கள் அறிவித்ததை தொடர்ந்து, அரியலூர் சட்டமன்ற உறுப்பினர் வழக்கறிஞர் கு.சின்னப்பா தலைமையில் வழக்கறிஞர்கள் அரியலூர் மாவட்ட கழக அலுவலகத்தில் தமிழ்நாடு அரசு போக்குவரத்துத்துறை அமைச்சர் சா.சி.சிவசங்கரை சந்தித்து தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களுக்கும், தமிழ்நாடு அரசு போக்குவரத்துத்துறை அமைச்சர் சா.சி.சிவசங்கருக்கும் நன்றி தெரிவித்தனர். உடன் ஜெயங்கொண்டம் சட்டமன்ற உறுப்பினர் க.சொ.க.கண்ணன், அரியலூர் நகரக் கழக செயலாளர் இரா.முருகேசன், மாவட்ட பொறியாளர் அணி அமைப்பாளர் கே.சி.ஸ்யிகிதிரவன் மற்றும் வழக்கறிஞர்கள் உள்ளனர்.

சேலம் மத்திய மாவட்ட தி.மு.க சார்பில் இளைஞரணி செயலாளரும். துணை முதல்வர். இளம் தலைவர். உதயநிதி ஸ்டாலின் அவர்களின் பிறந்தநாள். நவம்பர் 27ல் மாவட்டம் முழுவதும் எழுச்சியுடனும், நலத்திட்டங்கள் வழங்கி கொண்டாட முடிவு செய்யப்பட்டுள்ளது. மாவட்ட கழக செயலாளர். இரா. இராஜேந்திரன் தலைமையில் நடைபெற்ற கூட்டத்தில் மாவட்ட நிர்வாகிகள். மு.கார்த்திகேயன், தலைமைச் செயற்குழு உறுப்பினரகள் சி.ராஜேந்திரன், கே.டி.மணி தாமரைக்கண்ணன், மேயர். ஆ ராமச்சந்திரன், மாநகர செயலாளர். பா.ரகுபதி, அவைத்தலைவர். கே.ஆர். முருகன் உட்பட நிர்வாகிகள் இருந்தனர்.

கள்ளக்குறிச்சி மாவட்டத்தில் கூட்டுறவுத் துறையின் சார்பில்

நடப்பாண்டில் 1,11,753 பயனாளிகளுக்கு ரூ.879.46 கோடி கடனுதவி வழங்கப்பட்டுள்ளது!

அமைச்சர் எ.வ.வேலு தகவல்!

கள்ளக்குறிச்சி நவ.16:

கள்ளக்குறிச்சி சேலம் மெயின் ரோட்டில் அமைந்துள்ள தனியார் திருமண மண்டபத்தில் கூட்டுறவுத் துறையின் சார்பில் 71வது அனைத்திந்திய கூட்டுறவு வார விழாவில் பொதுப்பணிகள், நெடுஞ் சாலைகள் மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் எ.வ.வேலு (14.11.2024- வியாழக் கிழமை) அன்று கலந்து கொண்டு பயனாளிகளுக்கு பல்வேறு நலத் திட்ட உதவிகள் மற்றும் மாவட்ட அளவிலான சிறந்த கூட்டுறவு சங்கங்களுக்கு கேடயங்கள் மற்றும் பரிசுகளை வழங்கினார். இந்நிகழ்ச்சி மாவட்ட ஆட்சித்தலைவர் எம்.எஸ்.பிரசாந்த் தலைமையில் நடைபெற்றது.

மேலும் இந்நிகழ்ச்சியில் கள்ளக்குறிச்சி தெற்கு மாவட்ட கழக செயலாளர், ரிஷிவந்தியம் தொகுதி சட்டமன்ற உறுப்பினர் வசந்தம் க.கார்த்திகேயன், வடக்கு மாவட்ட கழக செயலாளர், சங்கராபுரம் தொகுதி சட்டமன்ற உறுப்பினர் தா.உதயசூரியன், கள்ளக்குறிச்சி நாடாளுமன்ற உறுப்பினர் தே. மலையரசன், உளுந்தூர் பேட்டை தொகுதி சட்டமன்ற உறுப்பினர் ஆ. ஜெ.மணிக்கண்ணன் ஆகியோர் கலந்து கொண்டார்கள்.

இந்நிகழ்ச்சியில் அமைச்சர் எ.வ.வேலு பேசியதாவது:

கூட்டுறவுத் துறையின் சார்பில் ஒவ்வொரு ஆண்டும் நவம்பர் 14 முதல் நவம்பர் 20 வரை ஒவ்வொரு கருப்பொருளை அடிப்படையாகக்

கொண்டு அகில இந்திய அளவில் கூட்டுறவு வார விழா கொண்டாடப்பட்டு வருகிறது. அந்த வகையில் இந்த ஆண்டு 71 வது அனைத்திந்திய கூட்டுறவு வார விழா புதுமை இந்தியாவை கட்டமைப்பதில் கூட்டுறவின் பங்கு என்ற கருப்பொருளின் அடிப்படையில் கொண்டாடப்படுகிறது. இதே போன்று மாநில அளவில் தமிழ்நாட்டின் சமூக பொருளாதார மேம்பாட்டில் கூட்டுறவின் பங்கு என்ற கருத்துருவின் அடிப்படையில் கொண்டாடப்பட்டு வருகிறது.

இதன் தொடர்ச்சியாக மாவட்ட அளவில் கள்ளக்குறிச்சி மாவட்டத்தில் 71 வது அனைத்திந்திய கூட்டுறவு வார விழா அரசின் புதிய செயல்திறன் மிகு திட்டங்களின் மூலம் கூட்டுறவை வலுப்படுத்துதல் என்ற கருப்பொருளை அடிப்படையாகக் கொண்டு இன்றைய தினம் கூட்டுறவு வார விழா தொடங்கி வைக்கப்பட்டுள்ளது. இவ்விழாவில் சிறந்த கூட்டுறவாளர், கூட்டுறவுத் துறை சார்ந்த போட்டிகளில் வெற்றி பெற்ற பள்ளி மற்றும் கல்லூரி மாணவ மாணவியர்கள், சிறந்த கூட்டுறவு சங்கங்கள், சிறந்த கூட்டுறவு நியாய விலைக்கடை விற்பனையாளர்கள் போன்றவர்களுக்கு பாராட்டுச் சான்றிதழ்கள் மற்றும் கேடயங்கள் வழங்கப்பட்டுள்ளது.

மேலும், இவ்விழாவில் விவசாயப் பயிர் கடன் 806 பயனாளிகளுக்கு ரூ.7,60,30,535/ மதிப்பீட்டிலும், கால்நடை பராமரிப்புக் கடன் 642 பயனாளிகளுக்கு ரூ.1,90,61,028 / மதிப்பீட்டிலும், மகளிர் சுய உதவிக்குழு கடன் 722 பயனாளிகளுக்கு ரூ.4,42,82,600/ மதிப்பீட்டிலும், மாற்றுத்திறனாளிகள் கடன் 4 பயனாளிகளுக்குரூ.2,00,000/ மதிப்பீட்டிலும், வீட்டுக் கடன் 2 பயனாளிகளுக்கு ரூ.2,50,000/ மதிப்பீட்டிலும், கல்விக் கடன் 1 பயனாளிக்கு ரூ.50,000/ மதிப்பீட்டிலும் என மொத்தம் 2,177 பயனாளிகளுக்கு ரூ. 14,21,24,163/ மதிப்பீட்டில் பல்வேறு நலத்திட்ட உதவிகள் வழங்கப்பட்டுள்ளது.நாடு முழுவதும் இந்திய பிரதமர் ஜவஹர்லால் நேரு அவர்களின் பிறந்த நாளான நவம்பர் 14ஆம் தேதி முதல் 20ஆம் தேதி வரை கூட்டுறவு வார விழா கொண்டாப்படுகிறது. 1904 ல் முதல்முதலாக கூட்டுறவு சங்கங்கள் இந்தியாவில் ஆங்கிலேயர்களால் தொடங்கப்பட்டது. 1932 ஆம் ஆண்டு தமிழ் நாட்டில் கூட்டுறவு இயக்கம் தொடங்கப்பட்டது. கள்ளக்குறிச்சி மாவட்டத்தில் விவசாயிகளை உள்ளடக்கிய 83 தொடக்க வேளாண்மை கூட்டுறவு சங்கங்களும், 3 மலைவாழ் மக்கள் பல்நோக்கு கூட்டுறவு சங்கங்கங்களும், 2 நகர கூட்டுறவு கடன் சங்கங்களும், 1 சுய உதவிக் குழு சங்கம் உள்ளிட்ட 115 கூட்டுறவு சங்கங்கள் செயல்படு கின்றன.

கள்ளக்குறிச்சி மாவட்டத்தில் மட்டும் 21,525 நபர்கள் பெற்ற ரூ.97 கோடி கடன் தள்ளுபடி செய்யப்பட்டுள்ளது. 1,428 மகளிர் சுய உதவிக் குழு பெற்ற ரூ.14.38 கோடி கடன் தள்ளுபடி செய்யப்பட்டுள்ளது. நடப்பாண்டில் 466 மகளிருக்கு ரூ.28.50 கோடி கடன் வழங்கப்பட்டுள்ளது. கள்ளக்குறிச்சி மாவட்டத்தில் 2,000க்கும் மேற்பட்ட மகளிர் சுய உதவிக்குழுக்கள் உள்ளன.

மக்கள் அதிகம் பயன்படுத்தும் நியாயவிலைக் கடைகளை நடத்துவது இந்த கூட்டுறவு இயக்கம் தான். கள்ளக்குறிச்சி மாவட்டத்தில் கூட்டுறவுத் துறையில் நடப்பாண்டில் பயிர்கடன், நகைக்கடன், கால்நடை பராமரிப்புக் கடன், மாற்றுத்திறனாளிகள் கடன், மத்திய கால கடன், மகளிர் சுய உதவிக் குழு கடன் என மொத்தம் 1,11,753 பயனாளிகளுக்கு ரூ.879.46 கோடி கடனுதவி வழங்கப்பட்டுள்ளது.

மேலும் இந்த ஆட்சி எப்பொழுதெல்லாம் வருகிறதோ அப்பொழுதெல்லாம் கூட்டுறவுத் துறையில் பல்வேறு வளர்ச்சி நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறது. எனவே தமிழக அரசின் இதுபோன்ற நலத்திட்ட உதவிகளை பயனாளிகள் உரிய முறையில் பெற்று பயன்படுத்தி வாழ்வில் முன்னேற வேண்டும் 61601 பொதுப்பணிகள், நெடுஞ்சாலைகள் மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் எ.வ.வேலு பேசினார்.

திருவண்ணாமலை மாவட்டம், கீழ்பென்னாத்தூர் தொகுதிக்குட்பட்ட, கீழ்பென்னாத்தூர் வடக்கு ஒன்றியம், கீழ்பென்னாத்தூர் தெற்கு ஒன்றியம், கீழ்பென்னாத்தூர் பேரூராட்சி, வேட்டவலம் பேரூராட்சி ஆகிய பகுதிகளில் உள்ள வாக்குசாவடி மையங்களில் நடைபெற்று வரும் வாக்காளர் பெயர் சேர்த்தல், நீக்கல்; சிறப்பு முகாமினை தமிழ்நாடு சட்டபேரவைத் துணைத்தலைவர் கு.பிச்சாண்டி அவர்கள் நேரில் சென்று பார்வையிட்டார். உடன் கீழ்பென்னாத்தூர் சட்டமன்ற தொகுதி பார்வையாளர் புதுவை மாநில மாணவரணி அமைப்பாளர் மணிமாறன், ஒன்றிய செயலாளர்கள் ஆராஞ்சி ஏ.எஸ்.ஆறுமுகம், இரா. ராஜேந்திரன், நகர செயலாளர்கள் சி.கே.அன்பு, ப.முருகையன், பேரூராட்சி தலைவர் சரவணன், ஒன்றிய துணை செலயாளர் இரா.சிவக்குமார், மாவட்ட பிரதிநிதி மா.குப்புசாமி, தேவவேந்திரன் பேரூராட்சி துணைத்தலைவர் தமிழரசி சுந்தரமூர்த்தி மற்றும் கழக நிர்வாகிகள் பொதுமக்கள் பலர் கலந்து கொண்டனர்.

திருவாரூர் மறைந்த மாவட்ட கழக செயலாளர் மனிதநேய பண்பாளர் பூண்டி கே.கலைச்செல்வம் அவர்களின் 17வது நினைவுதின அமைதிப்பேரணி கொர டாச்சேரியியில் மாவட்ட செயலாளர் பூண்டி. கே.கலைவாணன் எம்.எல்.ஏ. அவர்கள் தலைமையில் நடைபெற்றது சட்டமன்ற உறுப்பினர் துரை. சந்திரசேகர், தாட்கோ தலைவர் முன்னாள் அமைச்சர் உ.மதிவாணன், மாவட்ட ஊராட்சி தலைவர் தலையாமங்களம் ஜி.பாலு, மற்றும் மாநில, மாவட்ட ஒன்றிய, நகர, பேரூர்க்கழக நிர்வாகிகள், கழக தோழர்கள், பொதுமக்கள் பெருந்திரளாக பங்கேற்றனர்.

ஒருங்கிணைந்த கிருஷ்ணகிரி கிழக்கு – மேற்கு

மாவட்ட தி.மு.க. அவசர செயற்குழுக் கூட்டம்: அமைச்சர் அர.சக்கரபாணி சிறப்புரை!

மாவட்ட செயலாளர்கள் தே.மதியழகன் எம்.எல்.ஏ. – ஒய்.பிரகாஷ் எம்.எல்.ஏ. அறிக்கை!

கிருஷ்ணகிரி, நவ.18-

கிருஷ்ணகிரி மாவட்டச் செயலாளர்கள் தே.மதியழகன், ஒய்.பிரகாஷ் எம்.எல்.ஏ. விடுத்துள்ள அறிக்கை வருமாறு:-

திராவிட முன்னேற்றக் கழகத் தலைவரும்,

தமிழ்நாடு முதலமைச்சருமான தளபதியார் அவர்களின் ஆணைப்படி கிருஷ்ணகிரி கிழக்கு மற்றும் மேற்கு ஒருங்கிணைந்த மாவட்ட திமுக அவசர செயற்குழ கூட்டம் இன்று 18.11.2024 திங்கட்கிழமை மதியம் 1200 மணிக்கு கிருஷ்ணகிரி ஸ்ரீ தேவராஜ் மஹால் திருமண மண்டபத்தில் கிருஷ்ணகிரி கிழக்கு மாவட்ட அவைத் தலைவர் நாகராஜ்,

கிருஷ்ணகிரி மேற்கு மாவட்ட அவைத் தலைவர் யுவராஜ் தலைமையில் நடைபெற உள்ளது. இந்த அவசர செயற்குழு கூட்டத்தில் தமிழ்நாடு உணவு மற்றும் உணவுப் பொருள் வழங்கல் துறை அமைச்சரும், கிருஷ்ணகிரி மாவட்

டப் பொறுப்பு அமைச்சருமான அர.சக்கரபாணி அவர்கள் மற்றும் கிருஷ்ணகிரி கிழக்கு மாவட்ட செயலாளரும், பர்கூர் தொகுதி சட்டமன்ற உறுப்பினருமான தே. மதியழகன் , கிருஷ்ணகிரி மேற்கு மாவட்ட செயலாளரும், ஓசூர் தொகுதி சட்டமன்ற உறுப்பினருமான ஒய்.பிரகாஷ் கலந்து கொண்டு சிறப்புரையாற்ற உள்ளார்கள்.

இந்த ஒருங்கிணைந்த மாவட்ட அவசர செயற்குழு கூட்டத்தில் கிருஷ்ணகிரி கிழக்கு, மேற்கு மாவட்டத்தைச் சேர்ந்த கழக மூத்த முன்னோடிகள், முன்னாள் நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள், தலைமை செயற்குழு, பொதுக்குழு உறுப்பினர்கள், மாநில, மாவட்ட நிர்வாகிகள், ஒன்றிய, நகர, பேரூர் கழக செயலாளர்கள், மாவட்ட ஊராட்சி குழு, ஒன்றிய குழு, நகராட்சி, பேரூராட்சி தலைவர், துணைத் தலைவர், மாவட்ட பிரதிநிதிகள், அனைத்து அணிகளின் தலைவர், துணைத் தலைவர், மாவட்ட அமைப்பாளர், துணை அமைப்பாளர்கள் உள்ளிட்ட அனைவரும் தவறாமல் கலந்து கொண்டு சிறப்பிக்குமாறு அன்புடன் கேட்டுக்கொள்கிறோம்.

பொருள் : கழக இளைஞரணி செயலாளரும்,

இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சரும், தமிழ்நாடு துணை முதலமைச்சர் இளம்தலைவர் அவர்கள் டிசம்பர் 5 ஆம் தேதி கிருஷ்ணகிரி மாவட்டத்திற்கு வருகை தர உள்ளது தொடர்பாக.

நவம்பர் 27ஆம் தேதி கழக இளைஞரணி செயலாளரும், இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டு துறை அமைச்சர், தமிழ்நாடு துணை முதலமைச்சர்

இளம் தலைவர் அவர்களது பிறந்தநாளை சிறப்பாக கொண்டாடுவது தொடர்பாக.

வாக்காளர் பட்டியல் சரிபார்ப்பு சிறப்பு முகாம்கள் நடைபெற்று வருவது தொடர்பாக.

இவ்வாறு அவர்கள் தெரிவித்துள்ளனர்.

கள்ளக்குறிச்சி – வெள்ளிமலை அரசு ஏகலைவா மாதிரி உண்டி உறைவிட

ஆண்கள் மேல்நிலைப் பள்ளியில் மரக்கன்றுகள்!

அமைச்சர் மருத்துவர் மா.மதிவேந்தன் நட்டுவைத்தார்!

கள்ளக்குறிச்சி, நவ.18 -

கள்ளக்குறிச்சி மாவட்டம், சங்கராபுரம் சட்டமன்ற தொகுதி, கல்வராயன்மலை வட்டம், வெள்ளிமலை அரசு ஏகலைவா மாதிரி உண்டி உறைவிட ஆண்கள் மேல் நிலைப் பள்ளியில், ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறையின் சார்பில் தேசிய தொல்குடி நாளை முன்னிட்டு, தமிழ் நாடு பசுமை இயக்கத்துடன் இணைந்து மரம் நடும் விழாவினை ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர் மருத்துவர் மா.மதிவேந்தன் (15.11.2024 - வெள்ளிக்கிழமை) அன்று பள்ளி மாணவர்களுடன் இணைந்து மரக்கன்றுகளை நட்டு தொடங்கி வைத்தார்.

இவ்விழாவில், ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை அரசு செயலாளர் க.லட்சுமி பிரியா, மாவட்ட ஆட்சித்தலைவர் எம்.எஸ்.பிரசாந்த், வடக்கு மாவட்ட கழக செயலாளர், சங்கராபுரம் தொகுதி சட்டமன்ற உறுப்பினர் தா.உதய சூரியன், பழங்குடியினர் நலத்துறை இயக்குநர் ச.அண்ணா துரை, ம.தொ.ப., ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை அரசு கூடுதல் செயலாளர் இரா.உமா மகேஸ்வரி ஆகியோர் கலந்து கொண்டார்கள்.

நாடு முழுவதும் ஒவ்வொரு ஆண்டும் நவம்பர் திங்கள் 15 ஆம் நாள் தேசிய தொல்குடி நாளாகக் கொண்டாடப்படுகிறது. அந்த வகையில் தமிழ் நாடு அரசின் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை சார்பில், இன்றைய தினம் தமிழ்நாடு முழுவதும் பல்வேறு நிகழ்வுகள் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. இதன் ஒரு பகுதியாக கள்ளக்குறிச்சி மாவட்டம், கல்வராயன்மலை வட்டம், வெள்ளிமலை அரசு ஏகலைவா மாதிரி உண்டி உறைவிட ஆண்கள் மேல் நிலைப் பள்ளியில் மரம் நடும் விழாவினை ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர் மருத்துவர் மா.மதிவேந்தன் நேற்றைய முன்தினம் தொடங்கி வைத்தார்.

தேசிய தொல்குடி நாளை முன்னிட்டு தமிழ் நாடு அரசின் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறையின் சார்பில் தமிழ்நாடு பசுமை இயக்கத்துடன் இணைந்து மரம் நடும் விழா ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர் அவர்களால் நேற்றைய முன்தினம் வெள்ளிமலை அரசு ஏகலைவா மாதிரி உண்டி உறைவிட ஆண்கள் மேல் நிலைப்பள்ளியில் தொல்குடி பள்ளி பல்திறன் போட்டிகள் தொடக்க விழா இலச்சினையை (Logo) வெளியிட்டு, பள்ளி மாணவர்களுக்கு இலட்சினைகளை வழங்கினார்.

இந்நிகழ்ச்சியில் பழங்குடியினர் நல அலுவலர் பி.டி.சுந்தரம், உள்ளாட்சி அமைப்பின் பிரதிநிதிகள், பழங்குடியினர் நலத்துறை அரசு உயர் அலுவலர்கள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

தருமபுரி மேற்கு மாவட்டம் பிக்கனஅள்ளி ஊராட்சியில் சூடப்பட்டி கிராமத்தில் ஊராட்சிமன்ற பொது நிதியிலிருந்து 2 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில்,2 ஆயிரம் லிட்டர் கொள்ளளவு கொண்ட புதிய சின்டெக்ஸ் தண்ணீர் தொட்டி மற்றும் ஆடைகளை சலவை செய்யும் இடம் ஆகியவற்றை ஊராட்சிமன்ற தலைவர் பத்மாவதிசுப்ரமணி தலைமையில் தருமபுரி நாடாளுமன்ற உறுப்பினர் ஆ.மணி திறந்து வைத்தார். உடன் மாநில விவசாய அணி துணைச் செயலாளர் சூடப்பட்டி.சுப்பிரமணி, ஒன்றிய செயலாளர்கள் எம். வி.டி.கோபால், இல.கிருஷ்ணன்,முனியப்பன்,ஊராட்சி மன்ற துணைத் தலைவர் வஜ்ரவேல், வார்டு உறுப்பினர்கள் சம்பத்குமார், சரசுநாயக்கன் மற்றும் கழகத்தினர், பொதுமக்கள் உள்ளனர்.

தி.மு.க. விவசாய அணி

மாவட்ட, மாநகர அமைப்பாளர்கள் கூட்டம்!

தி.மு.க. விவசாய அணிச் செயலாளர் ஏ.கே.எஸ்.விஜயன் அறிவிப்பு!

தி.மு.க. விவசாய அணி மாவட்ட, மாநகர அமைப்பாளர்கள் கூட்டம் இன்று (18-11-2024 - திங்கட்கிழமை), மாலை 3.00 மணி அளவில் ஈரோடு மாவட்டக் கழக அலுவலகமான "கலைஞர் அறிவாலயத்தில்" கழக விவசாய அணித் தலைவர் என்.கே.கே.பெரியசாமி அவர்கள் தலைமையில், ஈரோடு தெற்கு மாவட்டச் செயலாளரும் வீட்டு வசதித் துறை அமைச்சர் எஸ்.முத்துசாமி மற்றும் விவசாய அணி துணைத் தலைவர்கள் இரா.தமிழ்மணி, எஸ்.கே.வேதரத்தினம் விவசாய அணி இணைச் செயலாளர்கள் எஸ்.அப்துல்காதர், நாகை ஆர்.அருட்செல்வன், கள்ளிப்பட்டி மணி, மா.முத்துராமலிங்கம், பா.செந்தமிழ்செல்வன், எல்.பி.தர்மலிங்கம், குறிஞ்சி என்.சிவகுமார் விவசாய அணி துணைச் செயலாளர்கள் முதுகுளத்தூர் கே.முருகவேல், ஆர்.டி.ஏ.ஆதிசேஷன், மதுரை ஆர்.கணேசன், கீழப்பாவூர் கு.செல்லப்பா, கிருஷ்ணகிரி டேம் டி.வெங்கடேசன், டி.எம். அரியப்பன், தஞ்சை ஜித்து (எ) ராஜரத்தினம், வி.என். மணி, இராமநாதபுரம் என்.நல்லசேதுபதி, திருப்பத்தூர் கே.புருஷோத்தமன், கள்ளக்குறிச்சி த.சித்தார்த்தன், சூடப்பட்டி சுப்பிர மணியன், பா.குணசேகரன் ஆகியோர் முன்னிலையில் நடைபெறும்.

இக்கூட்டத்தில் தி.மு.க. விவசாய அணி மாவட்ட, மாநகர அமைப்பாளர்கள் மட்டும் தவறாமல் கலந்து கொள்ள வேண்டுகிறேன்.

பொருள்: நவம்பர் 27 -தமிழ்நாடு துணை முதலமைச்சர் கழக இளைஞர் அணிச் செயலாளர் அவர்களின் பிறந்த நாள், அணியின் வளர்ச்சி ஆக்கப் பணிகள் -குறித்து.

"அண்ணா அறிவாலயம்"
சென்னை - 600 018
நாள்- 13.11.2024

ஏ.கே.எஸ்.விஜயன்,
செயலாளர்,
தி.மு.க. விவசாய அணி.